ஒரு மனு வந்தபோது, அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், அவை எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து, ஒரு நியாயமான நடவடிக்கையை எடுங்கள் என்று எங்களுக்குச் சொன்னார்கள். அதற்குப் பிறகுதான், மாநிலம் முழுவதும், 16 இடங்களில் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டன. அந்தப் புகார் பெட்டிகளின் வாயிலாக, 6,000 மனுக்கள் பெறப்பட்டு, பிரித்து வைக்கப்பட்டுள்ளன. அதற்காகத் தனியே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அக்குழு, அந்த மனுக்களை எடுத்து ஆய்வு செய்து, அவற்றின்மீது உரிய நியாயமான நடவடிக்கை, அதாவது வீட்டு வசதி வாரியத்திற்கும் பிரச்சினை ஏற்படாமல், நிலச் சொந்தக்காரர்களுக்கும் உரிமை விட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, மிக விரைவில், அது குறித்து முழுமையான தீர்வு காணப்படும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

விடுதி

***12080—திருமதி கு. மரகதம் குமரவேல்:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம் தொகுதியின் மக்கள்தொகை 2,75,953 ஆகும்.

2023 அக்டோபர் 10]

அதில் 1,37,903 நபர்கள் பெண்கள் ஆவர். இத்தொகுதியில் 95 தொழிற்சாலைகளில் 678 பெண் ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் சோழிங்கநல்லூர்–ஒக்கியம் துரைப்பாக்கம் என்ற இடத்தில் 50 படுக்கை வசதிகள் கொண்ட அரசு பணிபுரியும் மகளிர் விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், கூடுவாஞ்சேரியில் 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதியானது 120 படுக்கை வசதிகளுடன் தமிழ்நாடு மகளிர் விடுதி கழகத்தின்மூலம் கட்டப்பட்டு, 13–7–2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

தாம்பரத்தில் 420 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் பணிபுரியும் மகளிர் விடுதிப் பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளன. இவை தவிர, செங்கல்பட்டு மாவட்டத்தில் மொத்தம் 15 பதிவுபெற்ற தனியார் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண் பணியாளர்கள் மேற்குறிப்பிட்ட விடுதிகளில் தற்போது பயன்பெற்று வருகின்றனர். தேவையைப் பொறுத்து, எதிர்காலத்தில் 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதி அமைத்திட இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மதுராந்தகம் தொகுதியானது சுற்றிலும் கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். அங்கிருந்து பணிக்குச் செல்ல வேண்டுமென்றால் பொதுப் போக்குவரத்து குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே இயக்கப்படுகிறது. இதனால் அவர்கள் பணிக்குச் சென்று வர சிரமப்படுகின்றனர். மதுராந்தகம் நகரத்திலிருந்து காட்டாங்குளத்தூர், ஒரகடம், சிறுசேரி மற்றும் ஆலத்தூர் பகுதிகளில் தொழிற்பேட்டைகளில் பணிபுரிபவர்களின் வசதிக்காகத் தனியார் நிறுவனங்கள் பணியாளர்களுக்கு பேருந்துகளை இயக்குகின்றன. மேலும், இரயில் போக்குவரத்தும் உள்ளது. எனவே, மதுராந்தகம் நகர் பகுதியில் 'தோழி' மகளிர் தங்கும் விடுதி தொடங்கப்பட்டால், அங்கிருந்து அவர்கள் பணித் தலங்களுக்குச் செல்ல உதவியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுராந்தகம் நகரத்தில் தங்கும் விடுதி

அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களின் அதிக பணிப் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிபுரியும் மகளிர் விடுதி அமைத்திட வேண்டுமென்று கொள்கை முடிவெடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை இந்தத் துறைக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, ஏற்கெனவே, அடையாறு, விழுப்புரம், வேலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் விடுதிகள் புதியதாக நவீனப்படுத்தப்பட்டு, சீரமைக்கப்பட்டு, சகல வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 'தோழி' நிறுவனத்தின்மூலம் பணிபுரியும் மகளிர் விடுதிகள் திருச்சிராப்பள்ளி மற்றும் கூடுவாஞ்சேரி பகுதிகளில் புதியதாக திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், தாம்பரம், திருவண்ணாமலை, ஓசூர், கிருஷ்ணகிரி, St. Thomas Mount ஆகிய பகுதிகளிலும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் புதியதாகக் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, இவைமட்டுமல்லாமல், பணிபுரியும் மகளிர் விடுதிகள் இல்லாத எல்லா மாவட்டங்களிலும் அமைத்திட இடம் தேர்வு செய்து அளித்திட வேண்டுமென்று மாவட்ட நிருவாகத்திடம் நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் தேவையைப் பொறுத்து இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்கள் மற்றும் குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட சிறுமிகள், குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்ட பெண்கள் தங்குவதற்கான சேவை இல்லம், மதுராந்தகம் தொகுதியில் அமைக்கப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 அக்டோபர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்த பெண்கள், கைம்பெண்கள், அதைப்போல, தாய், தகப்பன் இல்லாத ஆதரவற்ற பெண்களெல்லாம் தங்குவதற்கு தாம்பரத்தில் சேவை இல்லம் செயல்பட்டு வருகிறது. அங்கே தங்கக்கூடிய பிள்ளைகளுக்கு நாம் கல்வி அளிக்கிறோம்; தொழிற்பயிற்சி அளிக்கிறோம். ஆகவே, அவர்களுக்குப் பாதுகாப்பும் அளிக்கப்பட்டு, அவர்கள் எதிர்காலத்தில் ஒரு வேலையைத் தேடிக்கொள்ளக்கூடிய அளவிற்கு, அவர்களுக்கு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்துகிற தேர்வுகளுக்கான பயிற்சியும் இந்தத் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண்களெல்லாம் அங்கு தங்கிப் பயனடையலாம். ஏனென்றால், அங்கு அதிகமான பேர் தங்கும் அளவிற்கு இடவசதி உள்ளது. உதாரணத்திற்கு 100 பேர் தங்கலாம் என்றால் இப்போது அங்கே 25 பேர், 33 பேர்தான் இருக்கின்றனர். ஆகவே, அந்த இல்லத்தை மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண்களும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

214—

கோரைப் பாய் நெசவுப் பூங்கா

***58818—திரு. S. அம்பேத்குமார்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதியில் கோரைப் பாய் நெசவுப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கதர் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் வந்தவாசி மத்திய பாய் நெசவாளர்கள் மற்றும் கோரை உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கம் 16-12-1962 முதல் செயல்பட்டு